


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக 'புதுமைப் பெண்' திட்டத்தின் விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டத்தில் விரிவுபடுத்தப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ உதவித்தொகை பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் கழக ஆதிதிராவிடர் நலகுழு மாநில செயலாளர் , ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ், எம்.பி., அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ. கணேசன், முனைவர் கோவி.செழியன் மா.மதிவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றி 100 நலிவுற்ற ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு பொற்கிழி வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராஜேந்திரன், கோ.ஐயப்பன், ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் செ. புஷ்பராஜ், மருதூர் ஏ.ராமலிங்கம், வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர்கள் பா.துரைசாமி, மு. பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தன், அரூர் சா. இராசேந்திரன் , மாரியப்பன் கென்னடி உள்பட ஆதிதிராவிட அணி நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ரூ.306.35 கோடி மதிப்பீட்டில்

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜன. 2 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன் தினம் (31.12..2024) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பெருந்திட்ட வரைவின் கீழ். ஹெச்.சி.எல். நிறுவனம் மற்றும் திருக்கோயில் நிதியின் மூலம் ரூ. 306.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணி களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பெருந்திட்ட வரைவின்கீழ், ரூ. 306.35 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ஹெச்.சி.எல். நிறுவனத்தின் மூலம் 20 பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 3 பணிகள் நிறைவு பெற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுர பணியானது விரைவுபடுத்த ப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது. வருகின்ற 20ஆம் தேதி 7 கோபுரங்களின் கட்டுமானப் பணிக்கான பாலாலயம் நடைபெற உள்ளது. இத்திருக்கோயிலின் பெருந்திட்ட வரைவு திட்டத்தின்படி, பக்தர்கள் தங்குவதற்காக 172 அறைகள் கட்டப்பட உள்ளன. அதில் ஏ மற்றும் பி பிளாக்கில் தற்போது 56 தங்கும் அறைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் வரும் மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

திருச்செந்தூர் திருக்கோயிலில் ஒட்டுமொத்தமாக 43 திருப்பணிகள் நடைபெற்று வந்தாலும், ஒவ்வொரு பணிகளும் நிறைவுறும் போது பக்தர்களின் நலன் கருதி அவ்வபோது திறக்கப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு வருகின்ற 2025 ஜுலை 7 அன்று குடமுழுக்கு நடத்திட தீர்மானிக்கப்பட்டு அனைத்து திருப்பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் வட மாநிலத்தில் வாரணாசி போன்ற பகுதிகளில் தான் பக்தர்களுக்கான அனைத்து வசதிகளுடன் பணிகள் நிறைவேற்றப்பட்டதாக கூறுவார்கள். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின், 28.09.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்ட இத்திருக்கோயில் திருப்பணிகள் தரத்தோடும், சிறப்போடும் எட்டுக்கால் பாய்ச்சலில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் நிறைவடையும் போது ஆன்மிகத்துக்கென்று திராவிட மாடல் ஆட்சியின் அடையாளமாக திருச் செந்தூர் திருக்கோயில் பணிகள் அமையும் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திருப்பணிகளில் ஹெச்.சி.எல். நிறுவனம் எடுத்துக் கொண்ட பணிகளில் 60 சதவீதமும், திருக்கோயில் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் 43 சதவீதமும் முடிந்திருக்கிறது. 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து திருப் பணி களும் நிறைவு செய்யப்படும். இத்திருப்பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்தகாரர்களும் இறை நம்பிக்கையோடு, இலாப நோக்கமின்றி, தரத்தோடு, முழுவீச்சில் பணிகளை செய்து வருகின்றார்கள். திருக்கோயிலுக்கு வருகை தரும் சாலைகளை மேம்பாடு செய்வதற்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வினை நடத்தியு ள்ளோம். அதற்கான நிதியினை சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பெற்று, அப்பணிகளையும் விரைவுபடுத்துவோம்.

திராவிட மாடல் அரசானது எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயலாற்றி வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு இன்றைய தினம் முதலமைச்சர் 25 ஆம் ஆண்டு விழாவை சிறப்போடு கன்னியாகுமரியில் நடத்தினார்கள். திருவள்ளுவர் அனைவருக்கும் பொதுவானவரை போல முதலமைச்சர் அவர்களும் அனைவருக்கும் பொதுவானவர். அவரது பணிச்சுமையை பொறுத்து இந்தப் பணிகளை பார்வையிடுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

பக்தர்களின் சிரமங்களை உணர்ந்ததால்தான் பெருந்திட்ட வரைவின் மூலம் இப்படிப்பட்ட திருப்பணி களை கொண்டு வந்தோம். திருப்பணிகள் நடைபெற்று வருவதால் குறைவான இடத்தில் ஆகம விதிக ளுக்குட்பட்டு, அர்ச்சகர்களுடன் கலந்து பேசி, பக்தர்கள் இலகுவாக தரிசனம் செய்வதற்கு அனைத்து வசதிகளையும் இந்து சமய அறநிலையத்துறை மேற்கொள்ளும். அர்ச்சகர்களும் அதற்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் தந்த அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துகளை தெரிவித்திருக்கும் திருக்குறளை திருக்கோயி ல்களில் படிப்பது குறித்து முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, வாய்ப்பிருக்கும் சூழலில் அதனை ஏற்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர்/ இணை ஆணையர் ஞானசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜனவரி 2 ஆம் தேதி முதல்

# சென்னை மின்சார ரயில்களின் அட்டவணை மாற்றம்!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜன. 2-

ஜனவரி 1, 2025 புதிய ரயில் அட்டவணை அமலுக்கு வருகிறது. இந்திய ரயில்வே அறிமுகம் செய்துள்ள புதிய ரயில் அட்டவணையில் ரயில் வழித்தட வரைபடம், ரயில் நிலையம் மற்றும் ரயில்களின் எண்கள், ரயில்களின் பெயர், பயண நேரம் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. மேலும் ரயில் டிக்கெட் முன்பதிவு தொடர்பாக விவரங்கள், தட்கல், டிக்கெட் கட்டணம் திரும்ப பெறும் முறைகள், ரயில் பயண சலுகைகள், சிறப்பு பயண திட்டங்கள் ஆகியவையும் இருக்கின்றன. இந்நிலையில் சென்னையில் அனைத்து மின்சார ரயில்களின் அட்டவணை ஜனவரி 2ம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடற்கரை - செங்கல்பட்டு, கும்மிடிப்பூண்டி உள்பட அனைத்து வழித்தட மின்சார ரயில்களின் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "01.01.2025 முதல் அமுலுக்கு வரும் வகையில் மெயில்/எக்ஸ்பிரஸ் ரயில் நேர மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பயணிகளின் தேவை மற்றும் செயல்பாட்டுக் காரணங்களைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் பிரிவுகளுக்கும் புறநகர் ரயில் நேரங்கள் திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட புறநகர் கால அட்டவணை 02 ஜனவரி 2025, (வியாழன்) முதல் நடைமுறைக்கு வரும் மற்றும் வார நாள் ரயில் சேவைகளுக்கு மட்டுமே இது பொருந்தும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2-ம் தேதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ள ரயில்களின் அட்டவணை முழு விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஓயாத உழைப்பால் தமிழ்நாடு முன்னேற்றம்!

# 2025ஆம் ஆண்டு மேலும் சிறக்க அனைவருக்கும் வாழ்த்துகள்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து!

சென்னை, ஜன. 2 -

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஓயாத உழைப்பினால் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது எனவும், வரும் ஆண்டும் மேலும் சிறக்க வாழ்த்துக்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு :-

உலகளாவிய மக்களால் எதிர்நோக்கி இருக்கும் ஆங்கில புத்தாண்டு நாளை பிறக்கிறது. மனிதகுலம் வாழ்வாங்கு வாழ உலகத்துக்கு பொதுமறையை வழங்கிய அய்யன் திருவள்ளுவனை கொண்ட தமிழர்களுக்கு தை முதல் நாளே தமிழ் ஆண்டு தொடக்கமாகும். என்றாலும் உலகோடு சேர்ந்து ஆங்கில புத்தாண்டு கொண்டாடும் அனைவருக்கும் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி அமைந்து மூன்றரை ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்த மூன்றரை ஆண்டு கால முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஓயாத உழைப்பால் எண்ணற்ற திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. மகளிருக்கான உரிமை தொகை, உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் உதவித்தொகை, மகளிருக்கான இலவச பேருந்து வசதி, மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி இப்படி இந்தியா மட்டுமல்ல உலகமே பாராட்டி பின்பற்றக்கூடிய அரிய திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்கும் வழி கோரியது திராவிட மாடல் அரசு. தொழில்துறையில் பின்னோக்கி இருந்த தமிழ்நாட்டை முன்னிலைக்கு கொண்டு வந்த பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம் இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் இரண்டாவது இடத்தை தமிழ்நாடு அடைந்துள்ளது. இப்படிப்பட்ட வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளை ஒரு மாநிலம் எடுக்கும் போது பாரபட்சம் இன்றி அந்த அரசுக்கு கை கொடுத்து உதவ வேண்டிய ஒன்றிய அரசு, அற்ப அரசியலுக்காக மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகளிலும் பாஜகவின் மோடி அரசு துரோகம் செய்து வருகிறது. ஆனால் அவற்றைப எல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டு தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமூச்சு டன் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

இன்று இந்தியா முழுவதும் மட்டுமல்ல உலக அளவில் போதை கலாச்சாரம் தலைவிரித்து ஆடுகிறது. குஜராத் மாநிலம் அதானி துறைமுகத்தின் வழியாக டன் கணக்கில் போதைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு இந்தியாவின் மாநிலங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இதனால் பள்ளி மாணவர்கள் உட்பட இளைஞர்கள் போதைக்கு அடிமையாக்கப்பட்டு வருவது வேதனைக்குரிய ஒன்றாகும். போதை கலாச்சாரத்தை ஒழிப்பது அரசுகளால் மட்டும் முடியாது. அரசு, அரசியல் கட்சி, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனி மனிதர்கள் என அனைவரும் சேர்ந்து எடுக்க வேண்டிய சமூக கடமையாகும். அந்த அடிப்படையில் போதையில்லா உலகத்தை உருவாக்கிட இந்த புத்தாண்டில் அனைவரும் உறுதி ஏற்றிட புத்தாண்டு வாழ்த்துக்களை விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சி உரித்தாக்குகிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

# 2025 தொழிற்பள்ளி அங்கீகாரம் பெற விண்ணப்பம்!

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அறிவிப்பு!

சென்னை, ஜன. 2 -

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் 2025 தொழிற்பள்ளி - அங்கீகாரம் பெறுவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2025-2026 ஆம் கல்வி யாண்டிற்கு புதிய தொழிற் பள்ளிகள் துவங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப் படுகின்றன. 02.01.2025 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

2025-2026 ஆம் கல்வி யாண்டிற்கு அங்கீகாரம் பெற ஒரு தொழிற்பள்ளி ஒரு இணையதள விண்ணப்பம் சமர்ப்பித்தால் போதுமானது.

விண்ண ப்பிக்க வுள்ள அனைத்து தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரே விண்ணப்பத்தில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப கட்டணம் மற்றும் ஆய்வுக்கட்டணம் RTGS/NEFT மூலம் செலுத்த வேண்டும்.

அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து விண்ணப்ப கட்டணம் ரூ.5000/- மற்றும் ஆய்வு கட்டணம் ரூ.8000/- செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 28.02.2025. இதற்கு பின் பெறப்படும் விண்ண ப்பங்கள் நிராகரி க்கப்படும்.

மேலும் அங்கீகாரம் குறித்த தகவல் மற்றும் அறிவுரைகள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

தொலைபேசி எண் : 044-22501006 (113)

Email ID : detischennai@gmail.com

இவ்வாறு வேலை வாய்ப்பு மற்றும பயிற்சித் துறை அறிவித்துள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், புதுமைப்பெண் திட்டத்தில் விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையில், பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார். இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், முன்னாள் அமைச்சர் வ. சத்தியமூர்த்தி மற்றும் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம்,துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் கே. கதிரவன், கீழக்கரை நகர் மன்றத் தலைவர் ஆபிதா, துணைத் தலைவர் ஹமீதுசுல்தான், திருப்புல்லாணி ஒன்றிய தலைவர் புள்ளாணி உட்பட அரசு அதிகாரிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.